முருகப்பெருமான் துணை

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**12.11.2021**, வெள்ளிக்கிழமை

1. தவமாக வந்த அரங்கனே
தருமமாக மக்களிடை பரவி
அவதாரம் புரிந்த தேசிகனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ துலை திங்கள்
இருபானாற் திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள், 12.11.2021 வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் விளையாட்டுச்சித்தர் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
ஓங்காரன் ஆசிபட அருளும்
ஞானவழிகளை மக்கள் ஏற்றிட
நச்சுக்கிருமி பேரிடர் அனைத்தும்
4. அனைத்தும் இயல்பாக விலகி
ஆபத்தின்றி பாதுகாப்பு பெருகும்
துணையாக அரங்கன் தருமமும்
தண்டாயுதன் வழிபாடும் கூடிட
5. கூடிட இந்த நிலைகள் யாவும்
குறைந்து தீவினை முழுதும் விலகி
தேடியே இயற்கை பாதுகாப்பும்
தேசிகன் அருள்பலமுமாக ஏற்றம் பெறும்
6. ஏற்றம் தரும் ஒரே மார்க்கம்
இணையில்லா அரங்கன் மார்க்கம்
ஆற்றல்பட பின்பற்றி வர
அனைவரும் சைவநெறி ஏற்று
7. ஏற்று தலைவா முருகா என
இனிதே செபதபம் செய்து
மாற்றம் நிகழ வேண்டுமென
மக்கள் எல்லாம் வணங்கி வர
8. வருகவே மக்களின் சக்தி
வல்லமையான ஞான சக்தியாக
தரும சக்தியாகவும் உருவாகி
தலைவன் ஆறுமுகன் வெளிப்பட
9. வெளிப்பட உகந்த காலமாகி
விரைந்து ஞானவான்கள் கூடிய
தெளிவுபட ஞான சபையாகி
தேசமெங்கும் ஞானத்தலைமை கண்டு

10. கண்டுமே ஞான ஆட்சி உருவாகும்
கலியுகத்தார் அஞ்சாத வண்ணம்
உண்டாகும் பாதுகாப்புமிக்க நல்
உயர் பூமியாக ஞான பூமியாகி

11. ஆகியே ஆறுமுகன் அருள்பட
ஆளும் காலம் கனியும்
மகிழவே அரங்க ஞானிவழி வாரீர்
மாற்றம் உண்டு சடுதி சடுதி
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–